

திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராக்கியாபாளையம் பிரிவு, சேரன் நகரில் இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு தலைமையில் மு.விக்னேஷ்குமார் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் முன்னிலையில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், ஊடகவியலாளர் செந்தில்வேல், தலைமைக் கழக இளம் பேச்சாளர் திருப்பூர் விஜயராஜ் கண்டன உரையாற்றினர். இதில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, திருச்சி தெற்கு மாவட்டம், சார்பாக சத்திரம் பேருந்து நிலையம் அருகில் பொதுமக்களின் தாகம் தணிக்கும் வகையில். நீர் மோர் பந்தலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி, இளநீர், வெள்ளரிப்பிஞ்சு மற்றும் குளிர்பானங்கள் ஆகியவைகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், செங்குட்டுவன், சபியுல்லா குணசேகரன் கோவிந்தராஜ், மூக்கன், லீலாவேலு, சரோஜினி, பகுதி கழகச் செயலாளர் மோகன், மாநகரக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## கல்வராயன்மலை – ஏற்காடு – பொள்ளாச்சியில் புதியதாக 3 ஆய்வு மாளிகைகள்!

# கடலூர் - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - ஓசூரில் புதியதாக 4 சுற்றுலா மாளிகைகள்!

### சட்டப்பேரவையில் - பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

**சென்னை, ஏப்.4 -**

**சட்டப்பேரவையில் பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்த அமைச்சர் எ.வ.வேலு, "கல்வராயன் மலை - ஏற்காடு - பொள்ளாச்சியில் 3 ஆய்வு மாளிகைகள் கட்டப்படும்" என்றும், "கடலூர் - காஞ்சிபுரம் - திருவள்ளூர் - ஓசூரில் - புதியதாக 4 சுற்றுலா மாளிகைகள் கட்டப்படும்" என்றும் அறிவித்தார்.**

சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு:-

(1) கடலூர், (2) காஞ்சிபுரம், (3) திருவள்ளூர் மற்றும் (4) ஓசூரில் புதியதாக 4 சுற்றுலா மாளிகைகள் ரூபாய் 21.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

1. கடலூரில் புதியதாக 1 சுற்றுலா மாளிகை ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

2. காஞ்சிபுரத்தில் புதியதாக 1 சுற்றுலா மாளிகை ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

3. திருவள்ளூரில் புதியதாக 1 சுற்றுலா மாளிகை ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

4. கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் புதியதாக 1 சுற்றுலா மாளிகை ரூபாய் 9.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

(1) கல்வராயன்மலை, (2) ஏற்காடு மற்றும் (3) பொள்ளாச்சி ஆகிய 3 இடங்களில் புதியதாக 3 ஆய்வு மாளிகைகள், ரூபாய் 9.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.



5. கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்வராயன் மலையில் புதியதாக 1 ஆய்வு மாளிகை ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

6. சேலம் மாவட்டம், ஏற்காட்டில் புதியதாக 1 ஆய்வு மாளிகை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

7. கோயம்பத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் புதியதாக 1 ஆய்வு மாளிகை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் அறிவிப்பு தர வேண்டுமென்று பல கோரிக்கைகளை என்னிடம் அளித்திருக்கிறார்கள். அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக, முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, (குறுக்கீடு)

அவற்றில் இந்த ஆண்டில் எவற்றிற்கெல்லாம் நிதி ஒதுக்கம் செய்ய முடியுமோ, அவற்றிற்கெல்லாம் C&M என்று சொல்லப்படுகின்ற கட்டுமானம் மற்றும் பராமரிப்பு என்கின்ற அலகின்கீழ், எவற்றையெல்லாம் உறுப்பினர்களுக்காக இந்த ஆண்டிலேயே நிறைவாக செயலாக்கம் செய்ய முடியுமோ, அவை துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர் அவர்களின் அனுமதியின் பேரில், திருநெல்வேலி மாவட்டம், மூலக்கரை, bypass சாலை அவசியம் செய்யவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். திருச்சியில் புதிய சுற்றுலா மாளிகை வேண்டும் என்று நீண்டகாலமாக கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவற்றையும் நிறைவேற்றுவதற்கு நெடுஞ்சாலைத் துறையும், பொதுப் பணித் துறையும் சிறப்பாகப் பணியாற்றும் என்று மீண்டும் ஒரு முறை சொல்லிக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு குறிப்பிட்டார்.

---

## கச்சத்தீவை விட்டுக் கொடுத்ததை நியாயப்படுத்தியவர் அ.தி.மு.க. முதலமைச்சர்!

# தேர்தலுக்காக தீர்மானம் போடுகிற கட்சி அல்ல தி.மு.க.!

### சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டி!

**சென்னை, ஏப்.4 -**

**தேர்தலுக்காக தீர்மானம் போடுகிற கட்சி அல்ல தி.மு.க. என்றும், கச்சத்தீவை இலங்கைக்கு இந்திய அரசு விட்டுக் கொடுத்ததை நியாயப்படு த்தியவர் அ.தி.மு.க. முதலமைச்சர் என்றும் சட்டத்துறை அமைச்சர் எஸ். இரகுபதி பேட்டியளித்துள்ளார்.**

சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (2.4.2025) தலைமைச் செயலகம், சட்டப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டி வருமாறு :-

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி இன்றைக்கு நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் ஒன்றியத்தில் 16 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தீர்கள் அப்பொழுது என்ன செய்தீர்கள்? என்று கேட்டார். எங்களைப் பொறுத்தவரைக்கும், அப்போதைக்கப்போது எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

1974லிருந்து கச்சத்தீவு பிரச்சினை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் எங்களை கலந்து ஆலோசிக்காமல் அதை செய்தது தவறு என்று சுட்டிக் காட்டி தமிழ்நாடு மக்கள் ஒரு போதும் கச்சத்தீவை தாரை வார்ப்பது ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை தெளிவுபடுத்தி இருப்பவர் எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஆவார்கள்.

இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால், இன்றைய நிலவரப்படி, வருவாய் துறையின் ஆவணங்களின்படி, கச்சத்தீவு என்பது இந்திய அரசின் ஒன்றியத்திற்கோ அல்லது தமிழக அரசுக்கோ சொந்தமானது அல்ல. ஜமீன்தாரி ஒழிப்பு சட்டத்தில் அது ராமநாதபுரம் ராஜாவுக்கு கொடுக்கப்பட்டது. அதை தொடர்ந்து அவர்கள் அதை அனுபவித்து வந்தார்கள். மற்றவர்களுக்கு குத்தகைக்கு விட்டார்கள். அதைப்போல ஒரு மீனவர் அங்கே ஒரு அந்தோனியார் கோயிலைக் கட்டினார். அதற்கு அனுமதி தந்தார்கள்.

**ராமநாதபுரம் ராஜாவோடு ஒப்பந்தம்!**



1913ல் சென்னை இராஜதானி ராமநாதபுரம் ராஜாவோடு தான் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதாவது இராமநாதபுரம் பகுதியை சுற்றி இருக்கக் கூடிய மீனவர்கள், மீன் பிடிப்பதற்கான வலைகளை உலர்த்திக் கொள்ளவும், அங்கு ஓய்வு எடுத்துக்கொள்ளவும், அனுமதியை ராமநாதபுரம் ஜமீன்தாரிடமிருந்து பெற்றது. இன்றைக்கு வருவாய்துறை கணக்குகளில் அதாவது மைல்கல் 1250, 255 ஏக்கர் நிலம் இராமநாதபுரம் ஜமீனுக்குச் சொந்தமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒன்றிய அரசு அன்றைக்கு 1974 நாளில் கச்சத்தீவை கொடுத்தது, அன்றைக்கு அவர்களுக்கு சொந்தமில்லாத ஒன்றை கொடுத்திருக்கிறார்கள்.

1976ல் ஸ்ரீலங்கா இந்தியா எல்லை உருவாக்கப்பட்ட போது, கச்சத் தீவு முழுவதும் இலங்கை பகுதிக்கு சென்று விட்டது. ஒன்றை மட்டும் இங்கே நான் சொல்ல விரும்புவது, 1960ஆம் ஆண்டில் அன்றைக்கு பெருவாரி வழக்கு அதாவது மேற்கு வங்காளத்திற்கு சொந்தமான பெருவாரி வழக்கு, அதை அன்றைய பாகிஸ்தானிற்கு இந்திய ஒன்றியம் கொடுத்தது. அது எங்களை கலந்தாலோசிக்காமல் கொடுக்கப்பட்டது தவறு என்று மேற்கு வங்க அரசு அன்றைக்கு முதலில் குடியரசுத் தலைவரிடம் முறையிட்டு, அதனை தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் முறை யிட்டார் கள்.

உச்சநீதிமன்றம் அன்றைக்கு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு தந்தது. அதாவது ஒரு மாநிலத்திற்கு சொந்தமான இடமோ, வேறு நாடுகளுக்கு கொடுப்பதாக இருந்தால், அந்த மாநிலத்தில் கலந்து அளிக்கவேண்டும். அடுத்ததாக, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அதற்கான ஒப்புதல் பெற வேண்டும். என்கின்ற வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை தந்தது.

ஆனால் கச்சத்தீவு விஷயத்தில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எந்தவிதமான ஒப்புதல் பெறப்பட்டதாக தெரியவில்லை. மாநில அரசை சட்டப்படி கலந்து ஆலோசித்ததாகவும் அங்கே இல்லை. எதுவுமே தகவல்கள் இல்லாமல் உடனடியாக 1974, 28ஆம் தேதி அன்று ஒப்பந்தம் கையெழுத்தான உடனேயே அதை பத்திரிகையில் பார்த்து தெரிந்துகொண்டு, 1974, 29ம் தேதி ஜூன் மாதமே அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அனைத்து கட்சி கூட்டத்தை அழைத்து நடத்தி, அதன் மூலமாக தங்களுடைய தமிழ்நாடு மக்கள் ஒரு போதும் கச்சத்தீவை தாரை வார்ப்பதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை தெளிவுப்படுத்தி இருக்கின்றார்கள்.

எனவே, இன்றைக்கு எங்களைச் சொல்கிற அதே அண்ணா திராவிட அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அவர்களுடைய ஆதரவிலும், ஒன்றிய அரசு ஏறக்குறைய 16 ஆண்டுகள் இருந்திருக்கிறது. வாஜ்பாய் அரசில் ஓராண்டு - நரசிம்மராவ் ஆட்சியில் 5 ஆண்டு அதற்கு பிறகு இன்றைய நம்முடைய பிரதமரின் ஆட்சியில் பத்தாண்டு காலம் என்று அவர்களும் ஏறக்குறைய 16 ஆண்டுகளுக்கு மேல் அவருடைய ஆதரவில் தான் ஒன்றிய அரசு நடைபெற்றிருக்கிறது.

நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு ஆட்சி மைனாரிட்டி அரசு தான். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆதரவில்தான் நடைபெற்றது. அதேபோல வாஜ்பாய் அரசு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஓராண்டு கால ஆதரவில் தான் நடைபெற்றது. தொடர்ந்து இந்த பத்தாண்டு காலத்தில் அவர்கள் இன்றைய பாரதிய ஜனதா அரசுக்கு அன்றைக்கு அதிமுக கழகம் முழு ஆதரவு கொடுத்தது. எனவே, 16 ஆண்டு காலம் நீங்கள் இருந்தீர்கள்,

நாங்கள் இருந்தோம் என்பது அல்ல. தமிழக மக்களுடைய வாழ்வாதாரப் பிரச்சனையை நாம் இன்றைக்கு கையில் எடுத்துக் கொண்டு அதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்பதற்காகத்தான் முதலமைச்சர் அவர்கள் இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தார். உடனே சொல்கிறார்கள் அடுத்த வருஷம் தேர்தல் வருகிறது தேர்தலுக்காக நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று.

**இது தேர்தலுக்கானது அல்ல!**

தேர்தலுக்காக தீர்மானம் கொண்டு வருகிற கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல. நாங்கள் தேர்தலுக்கு என்று பயப்படுபவர்கள் அல்ல. ஏனென்று சொன்னால், 3, 4, 5, 6 தேதிகளில் நம்முடைய இந்திய பிரதமர் அவர்கள் தாய்லாந்து நாட்டிற்கும், இலங்கைக்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றார்.

இலங்கையில் அவர் பல்வேறு விஷயங்களை பேச இருக்கின்ற பொழுது, இந்த மீன்பிடி துறையும், மீனவர்கள் பிரச்சினையும் பேசப்பட இருக்கிறது. அப்படி பேசுகின்ற பொழுது மீனவர்களின் நலனைக் காப்பதற்காக கச்சத்தீவை மீட்கவேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தினால் அது பிரதமருக்கு உதவியாக இருக்கும். எனவே, பிரதமர் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செல்கின்ற இந்த நேரத்தில், இந்த தீர்மானம் கொண்டுவருவது பொருத்தமாக இருக்கும் என்கின்ற காரணத்தினால் தான் முதலமைச்சர் அவர்கள் இந்த தீர்மா னத்தைக் கொண்டு வந்தார்கள்.

இது தேர்தலுக்கான ஒன்று அல்ல நாங்கள் மக்களை ஏமாற்றுகிறவர்கள் அல்ல. மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருக்கிற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக்கழகம். தேர்தலுக்காக தீர்மானம் போடுகின்ற கட்சி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி -** இன்றைக்கு தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிரதமர் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பாக நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு இருக்கிறதா?

**பதில் -** இந்தத் தீர்மானம் அனுப்பப்படுகின்ற போது நிச்சயமாக பிரதமர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை பார்ப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏனென்று சொன்னால் பாரதிய ஜனதா கட்சி இந்த தீர்மானத்தை ஆதரிக்கின்ற காரணத்தினால், பிரதமர் நிச்சயமாக இதனை வலியுறுத்திப் பேசுவார் என்பதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதனைத் தொடர்ந்து மேலும், சட்டத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது -

15.8.1991 அன்று கோட்டையில் கொடியேற்றிய அன்றை முதலமைச்சர் அவர்கள் கொடி ஏற்றி விட்டு பேசிய பொழுது, கச்சத்தீவை எக்காரணம் கொண்டும் விட்டுத்தர மாட்டோம். கச்சத்தீவை மீட்டே தீருவேன் என்று ஒரு சபதம் செய்தார். ஆனால், 20.4.1992 அன்று எட்டு மாதங்களுக்குப் பிறகு, தமிழக சட்டப்பேரவையில், அன்றைய முதலமைச்சர் சொன்னது என்ன தெரியுமா? கச்சத்தீவை மீட்பது என்பது விரைவில் நடைபெறக்கூடிய ஒன்றாக தெரியவில்லை என்று மீட்பதற்கு முற்றுப்புள்ளி வைப்பதைப் போல பேசியவர் அன்றைய முதலமைச்சர் 1992ல்.

தொடர்ந்து 30.9.1994ல் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த அன்றைய முதலமைச்சர் அவர்கள் அப்போது பிரதமராக இருந்த திரு.நரசிம்ம ராம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், தீவு நாடான இலங்கைக்கு இந்த சின்ன ஞ்சிறிய கச்சத்தீவை இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகதான் என்று அப்போதைய முதலமைச்சர், கச்சத்தீவை விட்டுக் கொடுத்ததை அன்றைக்கு நியாயப்படுத்தி குறிப்பிட்டது இன்றைக்கு இங்கு குறிப்பிட தகுந்த ஒன்று என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக 20.4.1992 அன்று 1994இல் முதலமைச்சராக இருந்த அன்றைய முதலமைச்சர் பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்களுக்கு 1994 இல் எழுதிய கடிதத்தில் இதைச் சொல்லி இருக்கிறார். அதாவது கச்சத்தீவை விட்டுக் கொடுத்தது, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே ஒரு நல்லுறவை நிலவிடவேண்டும் என்பதற்காகத்தான் என்று சொன்னார். அதைப்போல, அதற்குப் பிறகு எழுதிய கடிதத்திலும், அவர் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் ஒரு நல்லுறவு இருக்க வேண்டும் என்ப தன் அடிப்படையில் விட்டுக் கொடுத்தது என்பது பற்றி குறிப்பிட்டு இருக்கிறார். இது போன்ற காரணங்களால், அதை நீர்த்துப் போகச் செய்கின்ற வண்ணமும் அன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியில் இருந்த போதுதான் இப்படியும் சட்டமன்றங்களில் பேசியிருக்கிறார்கள். கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.இரகுபதி பேட்டியளித்துள்ளார்.



கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்துதலின்படி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கந்தர்வக்கோட்டை சட்டமன்றத்தொகுதி நாஞ்சூர் அன்னை தெரசா மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு இல்லத்தில் மாவட்டக் கழக செயலாளர் வழக்கறிஞர் கேகே.செல்லபாண்டியன் கலந்துகொண்டு மதிய உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். நிகழ்ச்சியில், ஒன்றிய கழக செயலாளர்கள் சி.சண்முகம், ஓ.எஸ்.வெங்கடாசலம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சி. குறிஞ்சிவாணன், சிங்கமுத்து, தமிழினியன், நைனா முகம்மது, எழில் ராஜா, விக்கி செல்வராஜ், கன்னியாபட்டி முருகேசன், வெங்கடாச்சலம், சித்திரைச் செல்வன், கூகூர் கனகமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தெற்கு மாநகர், வார்டு எண் 36 பார்க் ரோட்டில் பொதுப்பணிதுறை சார்பில் ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணியை மாவட்ட ஆட்சிதலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் துவக்கி வைத்து மரக்கன்றினை நட்டு வைத்தார். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி மு.நாகராசன் உள்பட மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.